## குடிநீர்த் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படும் போது

# தமிழ்நாட்டில் 8 கோடி மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கும்!

## சட்டப்பேரவையில் நகராட்சி நிர்வாகம் – குடிநீர் வழங்கல்துறை மானியக் கோரிக்கை –

## 63 அறிவிப்புகளை வெளியிட்டு அமைச்சர் கே.என். நேரு பதிலுரை!



**சென்னை, ஜூன் 24 –**

**தமிழ்நாடு சட்டப் பேரவையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியத்தில் அமைச்சர் கே.என்.நேரு தமது பதிலுரையில், சாலைப் பணிகள், பாதாளச் சாக்கடை திட்டப் பணிகள் விரிவுப்படுத்தப் பட்டுள்ளன என்றும், குடிநீர் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படும் போது தமிழ்நாட்டில் 8 கோடி மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கும் என்றும் பெருமையுடன் குறிப்பிட்டதுடன் 63 புதிய அறிவிப்புகளை யும் அறிவித்தார்.**

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் கே.என்.நேரு ஆற்றிய பதிலுரை:–**

ஒரு குக்கிராமத்திலே விவசாயியாக இருந்த எங்களை தலைவர் கலைஞர் அவர்கள் சீராட்டி, பாராட்டி, இயக்கத்திலும் பொறுப்பு தந்து, அரசிலும் பொறுப்பு தந்து, 20 ஆண்டு காலத்திற்கு மேலாக எங்களை வளர்த்து வந்த தலைவர் கலைஞர் அவர்களை இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.

அப்படி தலைவர் கலைஞர் அவர்கள் செய்த காரியத்தில் நம்முடைய தளபதி அவர்கள் எள் முனையளவுகூட குறையாமல் அவரைப்போலவே இயக்கத் தோழர்களையும், இயக்கத்திலே பணியாற்றுகிறவர்களையும் அரவணைத்து அவர்களைப் பெருமைப்படுத்தி இருக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்களையும் வணங்குகின்றேன். அதேபோல, இந்தத் தேர்தலிலே முழுமையாக தன்னந்தனி ஆளாக தலைவருக்கு உற்ற துணையாக இருந்து 40க்கு 40 வெற்றி பெற வைத்த இளைஞரணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் தம்பி உதயநிதி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அவை முன்னவர், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், எங்கள் துறையின் அதிகாரிகள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இடத்திலே நான் அமருவதற்கு தொடர்ந்து எனக்கு ஆதரவு அளித்து எங்களை வெற்றிபெற வைக்கின்ற என்னுடைய திருச்சி மாவட்ட மக்கள் அனைவருக்கும், குறிப்பாக, திருச்சி மேற்கு சட்டமன்றத் தொகுதியினுடைய அந்த மக்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரம்பலூர் பாராளுமன்றத்திலே அதிகமான வாக்குகளைத் தந்து வெற்றிபெற வைத்திருக்கிற திருச்சியில் இருக்கிற 4 சட்டமன்றத் தொகுதிகள், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி, குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் இருக்கிற மக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி எங்களை ஆளாக்கி இருக்கிற தலைவருக்கு, தளபதிக்கு என்றைக்கும் நன்றியுடைவர்களாக நாங்கள் இருப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3 ஆண்டுகளில் ரூ.7,737 கோடியில் 62 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்!

பூந்தமல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி பேசியிருக்கிறார்; அரவிந்த் ரமேஷ், பிரின்ஸ், சதன் திருமலைக்குமார், சதாசிவம் மற்றும் ராமலிங்கம் அவர்களெல்லாம் இந்த 2 துறையிலேயும் ஊரக வளர்ச்சித் துறையிலும், எனது துறையிலும் உரையாற்றி என்னென்ன பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, என்ன பணிகள் நடைபெற வேண்டும், எதிலே சிறு குற்றங்கள் இருக்கின்றன, அதை எப்படித் திருத்த வேண்டும் என்றெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கிருஷ்ணசாமி சொல்கிறபோது குப்பைக் கிடங்குகள் அந்தப் பகுதிக்கு அதிகமாக தேவையென்று சொல்லியிருக்கிறார்.

**உறுப்பினர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும்!**

தற்போது அதிலே பணியாற்றுகிற தூய்மைப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். கழிவுநீருக்கு அங்கு STP அமைத்து, கழிவுநீரைச் சுத்தம் செய்ய வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார். தொடர்ந்து இப்படி குப்பைக் கிடங்குகள் தேவையென்பதால் எங்களுடைய துறையின் அதிகாரிகளோடு நாங்கள் சிங்கப்பூர் சென்று பார்த்து, அவர்கள் எப்படி குப்பைகளைக் கையாளுகிறார்கள் என்பதைக் கண்டறிந்து, அதேபோல, தமிழ்நாட்டிலே குப்பைகளைக் கையாள வேண்டுமென்ற நோக்கத்தோடு சென்னையிலே பரிட்சார்த்த முறையிலே 350 கோடி ரூபாய் செலவிலே அந்தப் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. குப்பையை எடுத்து ஓரிடத்திலே கொட்டி, அந்தக் குப்பைகளைத் தரம் பிரித்து மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து, அதற்குப் பிறகு அதை எருவாகவும், அதை எரிபொருளாகவும் கொண்டு செல்கின்ற அந்தப் பணிக்குப் பதிலாக குப்பையை நேரடியாக ஓரிடத்திலே சென்று அதை 2 நாள் உழப்பி, மூன்றாவது நாள் அதை தீயிட்டு அதிலிருந்து டர்பன் மூலமாக மின்சாரம் தயாரிக்கின்ற பணி அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அது சிறிய நகரம். சிறியளவிலே செய்கிறார்கள். சென்னை மாநகரம் மிகப் பெரிய நகரம். அதற்கேற்றாற்போல் அங்கு கட்டமைப்புகளை உருவாக்குகிற பணியினை துறையினுடைய அதிகாரிகள் முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலோடு செய்து கொண்டிருக்கிறோம். எனவே, அதன் முதற்கட்டமாக மதுரை, கோவை, திருச்சி மற்றும் சென்னை ஆகிய 4 இடங்களிலே அதைத் துவங்கவும் இப்போது பரிட்சார்த்த முறையிலே அனைத்துப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்படி வருகிறபோது அந்தப் பகுதியில் இருக்கிற குப்பைகளை நேரடியாகக் கொண்டு வருகிற பணி நடைபெறும்.

அரவிந்த் ரமேஷ் பேசும்போது சொன்னார். சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டுகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம், குடிநீர் வழங்கல் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் விடுபட்ட 835 தெருக்களுக்கும், குடிநீர் வழங்கல் திட்டப் பணிகள் விடுபட்ட 773 தெருக்களுக்கும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான நிதியொதுக்கீடு செய்து அந்தப் பணி தொடங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 80 MLD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அது மக்கள் தொகைக்கு தேவைக்கு ஏற்றாற்போல் இல்லை. எனவே, மக்கள் தொகைக்கு ஏற்றாற்போல் கூடுதலாக 50 MLD குடிநீர் இப்போது கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது அதேபோன்று சட்டமன்ற உறுப்பினர் பிரின்ஸ் அவர்கள் சொன்னார்கள். ஊராட்சியை பேரூராட்சியாக மாற்றக்கூடாது. ஊராட்சியை நகராட்சியாக மாற்றக்கூடாது. ஒன்றிய அரசிலிருந்து வருகிற திட்டங்கள் ஊராட்சிகளுக்கு வராமல் போய்விடும் என்றெல்லாம் சொன்னார்கள். யாரும் ஊராட்சியை நகராட்சியாக மாற்றுவதோ, பேரூராட்சியாக மாற்றுவதோ என்னுடைய தனிப்பட்ட விருப்பத்திலோ அல்லது இங்கிருக்கிற சட்டமன்ற உறுப்பினருடைய விருப்பத்திலோ அல்ல. அதற்கென்று, செயலாளர் செந்தில் அவர்களுடைய தலைமையில், எங்களுடைய செயலாளருடன் இணைந்து ஒரு COMMITTEE அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த COMMITTEEயிலே இப்போது நீங்கள் பார்த்தீர்களேயானால், 490 பேரூராட்சிகள் இருக்கின்றன; 138 நகராட்சிகள் இருக்கின்றன; 25 மாநகராட்சிகள் இருக்கின்றன; 12,000க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் இருக்கின்றன; 380 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக சொல்ல வேண்டுமென்றால், ஒரே ஒரு பஞ்சாயத்தில், தூத்துக்குடி அருகிலுள்ள மாப்பிள்ளையூரணி என்ற பஞ்சாயத்தில் நாற்பதாயிரம் பேர் இருக்கிறார்கள், ஒரே பஞ்சாயத்தில். அதேபோல, சென்னைக்கு அருகில் இருக்கின்ற, ச. அரவிந்த் ரமேஷ் அவர்களுடைய பகுதியிலே, 7 பஞ்சாயத்தில் மட்டும் ஒன்றரை இலட்சம் மக்கள் இருக்கிறார்கள், 7 பஞ்சாயத்தில். அவர்களுடைய ஊராட்சி நிதி என்பது ஒரு பஞ்சாயத்தில் சுமார் 100 கோடி ரூபாய் இருக்கிறது. அதை முறைப்படுத்த வேண்டும், முறைப்படி செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் இந்தத் திட்டம்.

இப்போதுகூட, நகராட்சிகளைப் பெருக்குவது, பேரூராட்சிகளை அமைப்பது போன்ற பணிகளை ஏற்கெனவே நடைபெற்ற தேர்தலின்போதே செய்யவேண்டுமென்று எண்ணினோம். இப்போது சென்னை மாநகராட்சி என்று எடுத்துக்கொண்டால் 90 இலட்சம், 89 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். 89 இலட்சம் மக்களை உள்ளடக்கிய 200 வார்டுகள் இருக்கின்றன. அப்படி வருகிறபோது, ஒரு வார்டுக்கு சுமார் 40,000 மக்கள் இருக்கிறார்கள். ஒரு வார்டில் 15,000 வாக்காளர்கள், மக்கள் தொகையின் அடிப்படையில் ஒரு வார்டுக்கு இவ்வளவுதான் என்று முறைப்படுத்தி, அனைத்து வார்டுகளையும் அதிகப்படுத்தி, மக்கள் பிரதிநிதிகளைக் கூட்டுவதற்காக, அதிகப்படுத்துவதற்காக அந்தப் பணியும் தொடர்ந்து நடைபெறும். எனவே, அடுத்த முறை போட்டியிடுகின்ற இடங்களை, ஒவ்வொரு நகராட்சியிலும் சீர்செய்து, ஒரே அளவிலே, ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்று சொன்னால், 15,000 வாக்குகள் மட்டுமே அவருக்கு இருக்க வேண்டும்; 20,000 வாக்குகள் மட்டுமே இருக்க வேண்டும். ஓரிடத்தில் 50,000 என்றும், மற்றொரு இடத்தில் 20,000 வாக்குகள் என்றும் இருக்கக்கூடாது என்பதற்காகத் தான் இந்தப் பணி தொடங்கப்பட்டிருக்கிறது.

அதேபோல எங்களுடைய ஊராட்சியை எடுத்துக்கொண்டால் 2,000 மக்கள்தொகை உள்ளது. ஆனால், ஒரே ஊராட்சியில் 10,000க்கு மேற்பட்ட மக்கள்தொகை என்று கிட்டத்தட்ட 179 பஞ்சாயத்துகளிலே அதுபோல இருக்கிறது. எனவேதான், பணிகளை முறைப்படுத்த வேண்டும்; அரசு அலுவலர்களை வைத்து அந்தப் பணிகளைச் செய்ய வேண்டும்; அரசு தருகிற அந்தப் பணியை அவர்கள் ஒழுங்காகச் செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் இந்தப் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. ஒரு பஞ்சாயத்தில் 4,000 வாக்குகள் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தப் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரித்துவிடுவார்கள். அந்தப் பஞ்சாயத்து இரண்டாக வரும். ஒன்றிய அரசிலிருந்து நிதி வருகிறது என்று சொன்னால், அது அவர்களுக்குக் கிடைக்கட்டும். அதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை.

உறுப்பினர் ஜே.ஜி. பிரின்ஸ் துப்புரவு பணியாளர்கள் பற்றிச் சொன்னார்கள். அதேபோல, TWAD Boardல் இருக்கிற PIPEகளை எல்லாம் மாற்றவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது, முறைப்படி RETROFITTING மூலமாக, ஏற்கெனவே இருக்கின்ற PIPEகள் 50 ஆண்டுகள், 40 ஆண்டுகள் என ஆகிவிட்ட காரணத்தால், நெடுஞ்சாலைத் துறை விரிவாக்கம் நடைபெறுகிறது, அதிலே PIPEகள் பழுதுபட்டுவிடுகின்றன. இன்றைக்கு சென்னையில் தண்ணீர் தேங்குகிறது என்று சொன்னால், மெட்ரோ ரயில் திட்டத்தால்தான் பல இடங்களில் தண்ணீர் தேங்குகிறது. இல்லையென்று சொன்னால் வடிகால் போய்விடும். எனவே, அந்தத் திட்டமும், ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் சொல்வதும் செய்யப்படும்.

குறிப்பாக, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள் பேசுகிறபொழுது, இந்தத் துறையை மிகவும் பாராட்டி, குடிதண்ணீரைப் பொறுத்தளவு சிறப்பாக வழங்கி வருகிறார்கள் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற இந்த ஆட்சியிலே, குடிநீர் திட்டங்கள் எவ்வாறு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

உறுப்பினர் எஸ்.சதாசிவம் சொல்கிறபோது, வீரக்கல், PN பட்டி ஆகிய பேரூராட்சிகளில் குடிநீர் திட்டக் குழாய்கள் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டுவருவதாகச் சொல்லியிருக்கிறார். உடைப்புகள் சரிசெய்யப்பட்டு, இப்போது 1.90 MLD, சுமார் 2 MLD தண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். முறைப்படி அந்த PIPEகள் சரிசெய்து கொடுக்கப்படும் . அதேபோல, காவிரி நீரில் கழிவு நீர் கலப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். PWDவில் இடம் கொஞ்சம் கொடுக்கவில்லை. இல்லையென்றால், அந்த வேலையையும் உங்களுக்கு உடனடியாக முடித்துக் கொடுப்போம். ஆக்கிரமிப்பு எல்லாம் அகற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் ஒத்துழைத்தால், நீங்கள் எங்களுடன் இருந்தால் ஆக்கிரமிப்பை அகற்றலாம். ஏனென்றால் பாதி பேர் உங்கள் ஆட்கள். நீங்கள் செய்தால் ஆக்கிரமிப்பை அகற்றலாம். ஒரு பேருந்து நிலையம் முழுக்க முழுக்க, மாநகராட்சிக்கு இடம் வேண்டும்; நகராட்சிக்கு இடம் வேண்டும். எனவே, அதை செய்வோம்.

அதேபோல, உறுப்பினர் ராமலிங்கம் குடிநீர் தேவை, பேருந்து நிலைய விரிவாக்கம் பற்றி சொன்னார்கள். பேருந்து நிலையம் புதிதாகக் கட்டிக்கொண்டிருக்கிறோம். எனவே, நீங்கள் சொன்ன கோரிக்கைகள் அனைத்துமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது .

அதேபோல, உள்ளாட்சி குறித்து ஒரு குறிப்பு சொல்கிறேன். ஓர் ஊராட்சி பகுதியில் குறைந்தபட்சம் 10,000 மக்கள்தொகையும், 30 இலட்சம் ரூபாய் வருமானமும் இருந்தால் ஊராட்சியைப் பேரூராட்சியாகவும், குறைந்தபட்சம் 30,000 மக்கள்தொகையும், 50 இலட்சம் ரூபாய் வருமானமும் இருந்தால், பேரூராட்சியை நகராட்சியாகவும், குறைந்தபட்சம் 3 இலட்சம் மக்கள்தொகையும், 30 கோடி ரூபாய் வருமானமும் இருந்தால், நகராட்சியை மாநகராட்சியாக தரமுயர்த்தலாம் என்று தற்போது சட்டத்தில் இருக்கிறது. நாம் போட்ட சட்டத்திலே இருக்கிறது. ஆனால், இங்கு ஒன்றை நான் உங்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே, புதுக்கோட்டை, திருவண்ணாமலை, நாமக்கல் மற்றும் காரைக்குடி ஆகிய 4 நகராட்சிகள் மாநகராட்சிகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. பொதுமக்களுடைய கருத்தைக் கேட்டு, அவர்களுடைய அபிப்ராயத்தைக் கேட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அறிக்கைகள் பெற்று, அறிவிக்கப்பட்ட இந்த 4 மாநகராட்சிகளும் இன்னும் அடுத்த 20 நாட்களுக்குள்ளாகத் தரமுயர்த்தப்படும்.

புதிய மாநகராட்சிகள் தொடங்குவதற்கும்–ஏன் புதிய மாநகராட்சிகளைத் தொடங்கப் போகிறோம் என்று சொன்னால், குறிப்பாக உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இராமேஸ்வரம் இருக்கிறது; திருவண்ணாமலை இருக்கிறது. திருவண்ணாமலையில் கிரிவலப் பாதை என்று சொன்னால், அன்றையதினம் 5 இலட்சம், 10 இலட்சம் மக்கள் வருகின்றனர். அதேபோல, கோயில்கள் அதிகமாக இருக்கின்ற பகுதிகளையும், மக்கள் அதிகமாக வருகின்ற பகுதிகளையும் தரமுயர்த்தினால்தான், இந்தப் பணிகளைச் செவ்வனவே செய்ய முடியும் என்ற காரணத்திற்காகத்தான் தரமுயர்த்துகிற பணிகளை நாங்கள் சொல்லியிருக்கிறோம். 7 மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் அமைந்திருக்கிற இடங்கள் கிராம பஞ்சாயத்துகளில் இருக்கின்றன.

அதேபோல, TOURIST PLACES, HILL STATIONS, PILGRIM CENTRES 46 இடங்கள் இருக்கின்றன. அதேபோல, TOTAL RECOMMENDATION OF A LIST BY MPs, MLAs AND PUBLIC REPRESENTATIVES கிட்டத்திட்ட 776 இடங்களைத் தரமுயர்த்த வேண்டுமென்று MLAக்களும், MPக்களும், இங்கே இருக்கிற வியாபாரிகளும் கொடுத்திருக்கிறார்கள். எனவே, MERGING OF VILLAGE PANCHAYAT WITH TOWN PANCHAYAT 147 இடங்களிலே TOWN PANCHAYAT ஆக உருவாக்குகிற இடம் இப்போது PROPOSAL இருக்கிறது. AMALGAMATION OF VILLAGE PANCHAYAT TO CONSTITUTE 11 TOWN PANCHAYATS, 3, 4 இடங்களைச் சேர்த்து TOWN PANCHAYAT ஆக உருவாக்குகிற PROPOSAL 29 இடங்களிலே இருக்கிறது. இது வருமேயானால், 490 பேரூராட்சிகளாக இருப்பது, 700 பேரூராட்சிகளாக தரமுயரும். அதேபோல, நகராட்சியாக இருக்கிற 138 நகராட்சிகள் என்பது 159 வருகிறது. கிட்டத்திட்ட 200க்குள்ளாக அது வரும். இப்போது 25 மாநகராட்சிகள் இருக்கின்றன. நம்மை விட மிக சிறிய மாநிலம் குஜராத். அந்த மாநிலத்திலே 50 மாநகராட்சிகள் இருக்கின்றன. நம் மாநிலத்தில், நாம் இன்னும் 25 மாநகராட்சிகளைக் கொண்டிருக்கிறோம். எனவேதான், பக்கத்து மாநிலங்களில் எப்படியெல்லாம் நடைபெறுகிறது என்பதை அறிந்துகொண்டு, அப்படியிருக்கின்றவற்றை தரமுயர்த்துவதற்காக COMMITTEE அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலே 42 சதவிகித பேர் URBANநகர்ப்புறங்களிலே இருக்கின்றனர். ஆனால், அதற்குப் பிறகு பார்த்தால், இன்றைக்கு நகர்ப்புறங்களிலே வசிக்கின்ற மக்கள்தொகை என்பது 60 சதவிகிதத்திற்குமேல் இருக்கிறது. 60 சதவிகிதம் மட்டுமல்ல, தினந்தோறும் நகரத்திற்கு வந்து செல்கின்ற மக்கள்தொகை 10 சதவிகிதம். கிட்டத்திட்ட 70 சதவிகித மக்களுக்குத் தேவையான சாலைகள் அமைக்கப்பட வேண்டும்; அவர்களுக்கு தேவையான குடிநீர் வசதி செய்து தர வேண்டும்; கழிப்பறை வசதிகள் செய்து தர வேண்டும்; அங்கே கழிவு நீர் செல்ல வசதி ஏற்படுத்திட வேண்டும்; மழைநீர் வடிகால்கள் அமைக்க வேண்டும்; பேருந்து வசதிகள் செய்ய வேண்டும்; சந்தைப் பொருட்கள்–அவர்களின் பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக MARKETகள் அமைக்க வேண்டும். இப்படியெல்லாம், அமைக்கப்படுகின்றபோது, அந்த மாநகராட்சிக்கு வருவாய் வருகின்ற வகையிலே, அந்தப் பணிகளையும் செய்தாக வேண்டும். அதற்காகத்தான், இதை செய்கிறோமே தவிர, தனிப்பட்ட முறையில் இல்லை. என்னிடம் இருந்தாலும் ஒன்றுதான்; பெரியசாமி அவர்களிடம் இருந்தாலும் ஒன்றுதான். எங்களுக்குள் எந்த வேறுபாடும் இல்லை. எனவே, நீங்கள் அதிலே குறுக்கே புகுந்து, PANCHAYAT, TOWN PANCHAYAT என்று கொண்டு செல்லாதீர்கள். அதில் ஒன்றுமில்லை. PUBLIC HEARING நடைபெறுகிறது. உங்கள் OBJECTIONS வந்திருக்கிறது.

## ரூ. 8,672 கோடி மதிப்பீட்டில் 13,387 கி.மீ. நீளத்திற்கு சாலைப் பணிகள்!

மாநகராட்சியாக வந்தபோது, புதுக்கோட்டை மாநகராட்சிக்கு 1,170 பேருக்குமேல் OBJECTION கொடுத்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார். அதை கேட்காமல் போனால் அது நிற்காது. அதைக் கேட்டுதான் செய்யப்போகிறோம். (குறுக்கீடு) OBJECTION எல்லாம் கிடையாது அது ஒன்றுதான். மற்ற மாநகராட்சிகளில் OBJECTION இல்லை. எனவேதான் இந்தப் பணியை (குறுக்கீடு) உள்ளாட்சி (குறுக்கீடு) அவர்தான் சொல்ல வேண்டும். ஏன் இடம் பார்த்து கேட்கிறீர்கள் (சிரிப்பு) அதோடு, காலையில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர், அதாவது சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களும் குன்றத்தூர் மற்றும் 20 கிராம ஊராட்சிகளை ஒருங்கிணைத்து பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை நிறைவேற்ற வேண்டும். TNUIFSL நிறுவனத்தால் திட்ட அறிக்கை DPR தயாரிக்கப்பட்டுள்ளது. பரிசீலனை செய்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பூந்தமல்லி, திருவேற்காடு, மாங்காடு ஒருங்கிணைந்த பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூபாய் 972.73 கோடியில் நிறைவேற்றப்பட்டு அரசாணை எண் 93 நகராட்சி நிர்வாக நாள் 12-7-2023 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட SPF ரூபாய் 251.54 கோடி, KfW நிதி ரூபாய் 680.9 கோடி, GCF நிதி சுமார் 40 கோடி ரூபாய் வாங்கி அந்தப் பணியும் தொடங்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திறந்துவிடப்படும் உபரிநீர் ஆற்றுக்கு சென்று விரயமாகிறது என்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். மாங்காடு மற்றும் குன்றத்தூர் நகராட்சி மக்களின் குடிநீர் தேவைக்கு பயன்படுத்துமாறு கோரியுள்ளார். உபரிநீரை சிக்கராயபுரம் கல்குவாரியில் சேமிக்கும் வகையில் நீர்வளத் துறையில் ரூபாய் 35 கோடிக்கு அரசாணை அளிக்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கும் என அறியப்படுகிறது. தற்போது போதுமான குடிநீர் மாங்காடு மற்றும் குன்றத்தூர் நகராட்சிகளின் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இப்படி இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்து நம்முடைய (குறுக்கீடு) அதெல்லாம் ஒன்றுமில்லை. நம்முடைய மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம் அவர்களுக்கான பதில். மேட்டூர் நகராட்சி, மேட்டூர் பாதாளச் சாக்கடைத் திட்டத்தில் 9,957 வீட்டு இணைப்புகள் வழங்கப்பட வேண்டும். இதுவரை 4,951 வீடுகளுக்கு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டு மாத காலத்திற்குள் மீதி இணைப்புகள் வழங்கப்படும். STP முழுமையாக பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

சாலைப் பணிகள். 2023 - 2024 ஆம் ஆண்டுகளில் 26 கிலோமீட்டரும், 2024-2025 ஆம் ஆண்டுகளில் 2.94 கிலோமீட்டரும், 2022-2023 ஆம் ஆண்டுகளில் 1.60 கிலோமீட்டரும் ஆக 30.67 கிலோமீட்டர் சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் முடிந்தவுடன் இந்தச் சாலைகள் போடப்படும். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி கூறினார்கள். கரூர் மாநகராட்சிப் பகுதிகளுக்குட்பட்ட 13, 14, 15, 16 மற்றும் 18 வது வார்டில் சாக்கடை, குடிநீர் மற்றும் சாலை வசதி கோரியுள்ளார். கரூர் மாநகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூபாய் 476.12 கோடி மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூபாய் 113.20 கோடியில் செயல்படுத்த அரசாணை எண் 93 நகராட்சி நிர்வாகத் துறை 1272023 இல் ஆணையிடப்பட்டுள்ளது. பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள், குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் முடிந்தவுடன் சாலைப் பணிகள் தொடங்கப்படும்.

அதேபோல, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு 3.37 MLD குடிநீரும், கடவூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 5.50 MLD குடிநீரும் நான்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் குடிநீர் போதுமானதாக இல்லை என கண்டறியப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்க நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதன்பேரில், கிருஷ்ணராயபுரம் பகுதியை உள்ளடக்கிய ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான அறிவிப்பு இன்றைக்கே வெளியிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) கடவூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரை தனியே ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவது குறித்து விரிவாக ஆய்வு செய்து அதன் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு இருக்கிறவர்களுக்கு நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக் குமார் சொன்னதைப்போல, இங்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய பணியை உங்களுக்கு சொல்ல வேண்டும். நம்முடைய அமைச்சர் உடனே நீங்கள் செய்ய வேண்டுமென்று என்னிடம் கூறினார்கள். அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னவற்றையெல்லாம் ஏற்று நிதி நிலைமைக்கேற்ப அனைத்துப் பணிகளுக்கும் விரிவான திட்ட அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட பணிகள், இந்த ஆண்டு 3 பணிகளுக்குமேல் எடுக்க இருக்கிறோம். மீதம் இருக்கிற 4 பணிகளும் நிதி நிலைமைக்கேற்ப செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது கழக அரசு அமைவதற்குமுன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் 4 கோடியே 43 இலட்சம் மக்களுக்கு 1,928 MLD குடிநீர் வழங்கப்பட்டு வந்தது.

**கலைஞரால் உருவாக்கப்பட்ட குடிநீர் வாரியம்!**

தலைவர் கலைஞர் அவர்களால் 1971-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது முதல் நம்முடைய தளபதியார் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்பதற்கு முன்பு வரை தமிழ்நாட்டில் 1,928 MLD குடிநீர் கிட்டத்தட்ட 4 கோடியே 43 இலட்சம் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. கடந்த 3 ஆண்டுகளில் 62 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் காரணமாக, தற்போது 544 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலமாக 5 கோடியே 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 2,286 MLD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், சென்னை குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 89 இலட்சம் மக்களுக்கு 1,060 MLD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 35 குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் முடிவுறும்போது சுமார் 7 கோடி மக்களுக்கு 4,200 MLD குடிநீர் வழங்கப்பட்டுவிடும். இப்போது இந்த ஆண்டு ஆரம்பித்தது, 1 கோடியே 10 இலட்சம் பேருக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக கிட்டத்தட்ட 4,200 MLD குடிநீர் வழங்கப்பட்டுவிடும். இந்த ஆண்டு அரசால் அறிவிக்கப்பட்ட பெரம்பலூர், திண்டுக்கல், நாமக்கல், திருச்சி, கரூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களுக்கான 5 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும்போது 16 இலட்சம் மக்களுக்கு 100 MLD குடிநீர் வழங்க இயலும். இதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது TENDER LEVELக்கு வந்துவிட்டது. இவைதவிர, தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஒக்கேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்பகுதி II மற்றும் புதுக்கோட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களுக்கான 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் 94 இலட்சம் மக்களுக்கு 700 MLD குடிநீர் வழங்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. நிதி ஆதாரங்கள் சரி செய்யப்பட்டு பிறகு இந்தப் பணிகள் துவங்கப்படும்.

மேற்கண்ட அனைத்து குடிநீர்த் திட்டப் பணிகளும் நிறைவுறும்போது, தமிழ்நாடு முழுவதும் 8 கோடி மக்களுக்கு 5,000 MLD பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுவிடும். எனவே, குடிநீரைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 50 ஆண்டு காலத்தில் என்ன செய்ததோ, அதை இந்த 5 ஆண்டு காலத்திற்குள்ளாக நம்முடைய முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆதரவோடு (மேசையைத் தட்டும் ஒலி) செய்ததையடுத்து, இந்தக் குடிநீர் வடிகால் வாரியம் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கி வருகிறது.

**நகர்ப்புற உள்ளாட்சிகள்**

நான் நகர்ப்புற உள்ளாட்சிகள் பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அவை எதற்காக தரமுயர்த்தப்படுகின்றன என்பது பற்றி ஏற்கெனவே இங்கு விவாதிக்கப்பட்டுள்ளது. திருவையாறு, சங்கரி போன்ற பேரூராட்சிகளிலெல்லாம் சுமார் 40,000 மக்கள் தொகைக்கு மேலாக இருக்கிறது என்பது எங்களுக்கே தெரியும். அதனை நகராட்சிகளாகத் தரமுயர்த்த வேண்டும் என்று கொங்குத் தலைவர் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து அதற்கான COMMITTEEயில் முடிவு செய்தவுடன் ஓரிரு மாதங்களில் அவையனைத்தும் நகராட்சிகளாகத் தரமுயர்த்தப்படும்; பேரூராட்சிகள் தரமுயர்த்தப்படும்; பேரூராட்சிகள் அதிகப்படுத்தப்படும்; மாநகராட்சிகளும் அதிகப்படுத்தப்படும்.

சென்னையில் மழைக் காலங்களில் எப்போதும் வெள்ளம் வந்துவிடுவதால் அதிகமான பாதிப்பு ஏற்படுகிறது. இங்கேயிருக்கிற மூன்றாறுகள், அடையாறு (குறுக்கீடு) ஏதோ கேட்கிறார். பக்கிங்காம் கால்வாய், அடையாறு, கூவம் போன்ற நதிகளை சீரமைப்பதற்காக நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை ஒன்று இருக்கிறது. அதன்மூலமாக தனியார் பங்களிப்புடன் சுமார் 1,500 கோடி ரூபாய் செலவில் அனைத்து நதிகளையும் சரி செய்து, அதன் கரையை பலப்படுத்தி, நடைபாதை அமைத்து, மக்கள் பொழுதுபோக்கிற்காக பூங்காக்கள் அமைக்கின்ற பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**தெருநாய் பிரச்சினைகள்!**

தெரு நாய்கள் பிரச்சினை முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. கொரோனா காலத்தில் இரண்டாண்டு காலமாக அதை சரியாகக் கையாளாத காரணத்தால் தற்போது நிறைய பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. பணக்காரர்கள் நிறைய பேர் நாய் வளர்க்கிறார்கள். நாயை வளர்க்கும்போது அதைப் பாதுகாப்பாக வளர்க்க வேண்டும் என்று எங்கள் துறையின் ஆணையர் தினந்தோறும் அறிக்கை வெளியிடுகிறார்கள்; ஆய்வு செய்கிறார்கள்; அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கிறார்கள். ஆனாலும், நாயை பார்க்கிற்கு அழைத்து வரும்போது சில தவறுகள் நடைபெற்றுவிடுகின்றன. மாநகராட்சிகளில் இதற்காக கிட்டத்தட்ட 78 பயிற்சி பெற்ற அலுவலர்கள் இருக்கிறார்கள். அதற்காக வண்டி இருக்கிறது. என்ன செய்ய வேண்டுமென்றால், நாயைப் பிடித்து, கருத்தடை செய்து, மூன்றாக நாட்கள் பாதுகாப்பாக வைத்திருந்து, பிறகு அதை பிடித்த இடத்திலேயே கொண்டுவந்துவிட வேண்டும். அப்படி விடவில்லையென்றால், சம்பந்தப்பட்டவர்களுக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை அளிக்கப்படும் என்று சொல்கிறார்கள். நீங்கள் பாருங்கள், ஒன்றிய அரசினுடைய சட்டம் எப்படியிருக்கிறது என்று. (குறுக்கீடு) 5 ஆண்டு சிறை தண்டனை அளிக்கப்படும் என்று அதில் இருக்கிறது. எனவேதான், இதில் அதிக கவனம் எடுத்திருக்கிறோம்.

இன்னும் கூடுதலாக அலுவலர்களை வைத்து, நாய்களுக்கு கருத்தடை செய்து பெருகாமல் பார்த்துக்கொண்டு, மக்களையும் பாதுகாக்கின்ற பணியை துறை நிச்சயமாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், மாடுகளால் அதிகளவு பாதிப்பு ஏற்படுகிறது. அமைச்சர் அன்பரசுடன் நங்கநல்லூர் சென்றிருந்தேன்.

ஒரு பக்கம் மாடுகள் வேண்டாம், வேண்டாம் என்று சொல்கிறார்கள்; அதே நேரத்தில் மாடு வருகின்றபோது அகத்திக்கீரையைக் கொடுக்கிறார்கள். இரண்டும் தேவை. மதசார்பற்ற முறையில் கொடுக்கிறார். முதல் தடவை பிடித்தால் 5,000 ரூபாயும், இரண்டாவது தடவை பிடித்தால் 10,000 ரூபாயும் அபராதம் விதிக்கப்படுகிறது. இந்த முறை, மூன்றாவது தடவையாக பிடித்தால், பறிமுதல் செய்யப்பட்டு ஏலம் விடப்படும் என்று சொல்லியிருக்கிறோம். அதற்கான சட்டம் இருக்கிறது. எனவே, அதற்கான நடவடிக்கைகளை முழுமையாக துறை எடுத்துக்கொண்டிருக்கிறது.

இந்தப் பேரவையில் நான்காவது ஆண்டாக நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கையின் விவாதத்தின்மீது என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன்.

இத்துறையில் மிக இன்றியமையாத கடமைகள் தமிழ்நாட்டு மக்களுக்கு தங்குத்தடையின்றி குடிநீர் வழங்குதல், சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை, கழிவுநீர் அகற்றுதல், தெரு விளக்குகள் பராமரித்தல், பொது சுகாதாரம் பாதுகாத்தல், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல், நகர்ப்புற நீர்நிலைகளைப் பாதுகாத்தல், குடிசைப் பகுதிகளை மேம்படுத்துதல், நகர்ப்புற வேலை வாய்ப்பு மற்றும் அடிப்படை கல்வியை உறுதி செய்தல், நூலகங்கள் அமைத்தல், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், நகரமைப்பு பணிகளை முறையாக செயல்படுத்துதல் மற்றும் நகர்ப்புற வாழ்வாதாரத்தை வழங்குதல் போன்ற எண்ணற்ற பணிகளாகும்.

**நகராட்சிகள் மாநகராட்சியாக தரம் உயர்த்துதல்**

பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் சார்பு நிறுவனங்களான TUFIDCO, TNUIFSL, TWIC, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மற்றும் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம் ஆகியவை மூலம் இப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் நகரங்களில் அபரிதமான வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, காரைக்குடி, புதுக்கோட்டை, திருவண்ணாமலை மற்றும் நாமக்கல் ஆகிய நகராட்சிகளை மாநகராட்சிகளாகத் தரமுயர்த்தி முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். மேலும், வளர்ந்து வரும் நகர்ப்புற வளர்ச்சி வரலாற்று முக்கியத்துவம் மற்றும் ஆன்மீகத் தலங்கள். நகரத்திற்கு வந்து செல்லும் மக்களின் வசதிகள் ஆகியவற்றை கருத்தில்கொண்டு நகர்ப்புற உள்ளாட்சிகளின் நிலையை உயர்த்தவும் மற்றும் தகுதியான கிராம ஊராட்சிகளை பேரூராட்சிகளாகவும், பேரூராட்சிகள் நகராட்சிகளாகவும், நகராட்சிகள் மாநகராட்சிகளாகவும் தரம் உயர்த்தவும், மேலும் இவற்றிற்கு அருகில் அமைந்துள்ள வளர்ச்சி அடைந்த உள்ளாட்சிகளை இணைத்து நகர்ப்புறங்களை விரிவாக்கம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கழக அரசு பொறுப்பேற்றதிலிருந்து இந்த 3 ஆண்டுக் காலத்தில் மட்டும், இந்தத் துறையில் தமிழ்நாட்டு மக்களுக்காக, நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்களுடைய ஆணையின்பேரில் எவ்வளவு நிதியொதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இப்போது எடுத்துச் சொல்கிறேன்.

தொடர்ச்சி 5-ஆம் பக்கம்